P.L.RAJ IAS & IPS ACADEMY
Building Bureaucrats Since 2006

## September 6, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. தற்போதைய உலகவரைபடத்தில் உள்ள தவறுகளைத் திருத்தி மிகத் துல்லியமான புதிய வரைபடம் வெளியிடக் கோரும் ஐ.நா. பொதுச் சபை தீர்மானத்துக்கு ஆதரவாக இந்தியா வாக்களித்தது.

i. 193 நாடுகளைக்கொண்ட ஐ.நா. பொதுச் சபையில் டோகோ நாடு முன்மொழிந்த இந்தத் தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பு நடைபெற்றது. தீர்மானத்துக்கு ஆதரவாக இந்தியா, பாகிஸ்தான் உள்ளிட்ட 164 நாடுகள் வாக்களித்தன.

ii. எஸ்டோனியா, ஜார்ஜியா, லித்துவானியா, மால்டோவா, செர்பியா மற்றும் உக்ரைன் ஆகிய நாடுகள் வாக்கெடுப்பை புறக்கணித்த நிலையில், தீர்மானத்துக்கு எதிராக அமெரிக்கா மட்டுமே வாக்களித்தது. தீர்மானத்தில் கூறப்பட்டிருப்ப தாவது:

- மெர்காதோர் என்ற புவியியலாளர் 16-ஆம் நூற்றாண்டில் கடல்வழிப் பயணங்களுக்காக உருவாக்கிய உலக வரைபடமே கல்வி, ஊடகம், எண்ம மற்றும் அதிகாரபூர்வ பதிவுகளில் பெரும்பாலும் இந்த பயன்படுத்தப்படுகிறது. வரைபடம் பூமத்திய ரேகைக்கு அருகில் உள்ள நாடுகளை சிறியதாகவும், தொலைவில் உள்ள நாடுகளை மிகப் பெரிதாகவும் காட்டுகிறது.
- இதனால் ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்கா மற்றும் தெற்காசிய பகுதிகளின் பரப்பளவு சிறியதாக காட்சியளித்து சமநிலையற்ற உலகப் பார்வையை ஏற்படுத்துகிறது. எனவே, பல்வேறு தவறுகளுடன் காட்சியளிக்கும் பழைய வரைபடத்தில் திருத்தங்கள் மேற்கொண்டு புதிய வரைபடத்தை தயாரித்து வெளியிட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டது.

iii. இந்தியா வரவேற்பு:
தீர்மானத்தை வரவேற்று ஐ.நா.வுக்கான நிரந்தர இந்தியக் குழுவின் முதல் செயலர் ரகு புரி பேசியதாவது:

- உலக புவியியல் மற்றும் பிற நாடுகள் குறித்து சமூகம் புரிந்துகொள் வதில் வரைபடங்கள் முக்கியப் பங்காற்றுகின்றன. இந்தத் தீர்மானம் கண்டங்கள் மற்றும் பிராந்தியங்களின் உண்மையான பரப்பளவை பிரதிபலிக்கும் சம

பரப்பு வரைபடத்தை உருவாக்கவே கோருகிறது என்று இந்தியா நம்புகிறது.

- புதிய வரைபடத்தால் நாடுகளின் வடிவம், திசை அல்லது தொலைவு ஆகிய அம்சங்கள் முறையாகப் பாதுகாக்கப்படும். எனவே, புதிய வரைபட வடிவமைப்பு தொழில்நுட்ப ரீதியாகவும், நடுநிலையாகவும் இருக்கும் என எதிர்பார்க்கிறோம். அதனடிப்படையில் இந்தத் தீர்மானத்துக்கு ஆதரவாக இந்தியா வாக்களிக்கிறது என்றார்.

2. நமீபியாவின் எச்.ஐ.வி. நோய்த் தடுப்புத் திட்டத்துக்கான வருடாந்திர நிதியுதவியை நிறுத்த இருப்பதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

i. ஆப்பிரிக்க நாடுகளில் ஒன்றான நமீபியாவுக்கு ஆண்டுதோறும் எச்.ஐ.வி. நோய்த் தடுப்புத் திட்டங்களுக்கு 45 மில்லியன் டாலர் (இந்திய மதிப்பில் ரூ.425 கோடி) நிதியுதவியை கடந்த 2003-ஆம் ஆண்டுமுதல் அமெரிக்கா வழங்கி வந்தது. வரும் 2027-ஆம் ஆண்டுக்கும் வருடாந்திர நிதியுதவியாக 45 மில்லியன் டாலரை அமெரிக்கா வழங்கவுள்ளது. இதையும் சேர்த்து, நமீபியாவுக்கு அமெரிக்கா இதுவரை 1.1 பில்லியன் டாலருக்கும் (சுமார் ரூ.10,390 கோடி) அதிகமாக நிதியுதவியை அளித்துள்ளது.

ii. இந்நிலையில், இந்த நிதியுதவியை நிறுத்த அமெரிக்கா முடிவு செய்துள்ளது. இதை நமீபியாவும் ஏற்றுக் கொண்டுள்ளது. இதுகுறித்து அமெரிக்காவும், நமீபியாவும் கூட்டாக வெளியிட்டுள்ள அறிவிப்பில், 'அமெரிக்கா 2027-ஆம் ஆண்டுக்குப் பிறகு நிதியுதவியை நிறுத்திவிடும். அதன்பிறகு நமீபியாவே நிதியைச் செலவிடும். அமெரிக்கா தொழில்நுட்ப ஒத்துழைப்பு மட்டும் அளிக்கும்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

iii. நமீபியாவிடம் அந்நாட்டு மக்களின் உடல்நிலை தொடர்பான தரவு உள்ளிட்ட விவரங்களை அமெரிக்கா கோரியிருந்தது. ஆனால், இறையாண்மை, தன் மறைப்பு நிலை உரிமை உள்ளிட்டவற்றைச் சுட்டிக்காட்டி, அந்த விவரங்களை அளிக்க நமீபியா மறுத்துவிட்டது. இதையடுத்து, நிதியுதவியை நிறுத்துவது தொடர்பான முடிவை அமெரிக்கா எடுத்ததாகக் கூறப்படுகிறது.

iv. அண்மையில் தென்னாப்பிரிக்காவுக்கு எச்.ஐ.வி. நோய்த் தடுப்புத் திட்டங்களுக்கு ஆண்டுதோறும் வழங்கி வந்த 400 மில்லியன் டாலர் (சுமார் ரூ.3,770 கோடி) நிதியுதவியை அமெரிக்கா நிறுத்தியது குறிப்பிடத்தக்கது.

3. தலைமை பொறுப்பில் இருந்து டிம் குக் ஓய்வைத் தொடர்ந்து ஆப்பிள்

நிறுவனத்தின் 25 ஆண்டு கால வன்பொருள் நிபுணரான ஜான் டெர்னஸ், புதிய தலைவராகப் பொறுப்பேற்றார். இவரின் தலைமையின்கீழ், ஆப்பிள் தயாரிப்புகளின் ஆண்டு அறிமுக விழா மிகுந்த எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் வரும் 9-ஆம் தேதி முதல்முறையாக நடைபெறுகிறது.

4. பிரபல அமெரிக்க பன்னாட்டு மென்பொருள் நிறுவனமான அடோப்-இன் புதிய தலைவர் மற்றும் தலைமைச் செயல் அதிகாரியாக (சிஇஓ) அனில் சக்ரவர்த்தி நியமிக்கப்பட்டுள்ளார்.
   i. கடந்த 18 ஆண்டுகளுக்கும் மேலாக இந்நிறுவனத்தை வெற்றிகரமாக வழி நடத்தி வந்த சாந்தனு நாராயணுக்குப் பதில், வரும் டிச. 1 முதல் அனில் சக்ரவர்த்தி புதிய பொறுப்பை ஏற்கவுள்ளதாகவும், சாந்தனு நாராயண் நிர்வாகத் தலைவர் பொறுப்புக்கு மாற உள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

5. தமிழகத்தில் யானை வழித்தடங்களாக அறிவிக்க வேண்டிய பகுதிகளை அடையாளம் கண்டு, அறிக்கை தாக்கல் செய்ய தமிழக அரசுக்கு மூன்று மாத கால அவகாசம் வழங்கி சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.
   i. சென்னை உயர்நீதிமன்றத்தில், தமிழகத்தில் உள்ள யானை வழித்தடங்களை அடையாளம் கண்டு, அறிவிப்பு வெளியிடக்கோரி வழக்குத் தொடரப்பட்டிருந்தது.
   ii. இந்த வழக்கை விசாரித்த உயர்நீதிமன்றம், யானை வழித்தடங்களைக் கண்டறிய முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் தலைமையில் குழு அமைத்து உத்தரவு பிறப்பித்திருந்தது.
   iii. இந்த வழக்கு சுற்றுச்சூழல், வனம் மற்றும் வனவிலங்குகள் தொடர்பான வழக்குகளை விசாரிக்கும் நீதிபதிகள் என்.சதீஷ்குமார் மற்றும் கே.ராஜசேகர் ஆகியோர் அடங்கிய சிறப்பு அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது அரசுத் தரப்பில் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.
   iv. அதில், தமிழகத்தில் ஜவாலகிரி-தக்கட்டி, ஜவாலகிரி-அஞ்செட்டி, பில்லிக்கல்-ஜவாலகிரி ஆகிய மூன்று பகுதிகளை யானைகள் வழித்தடங்களாக அறிவித்து ஆக.27-ஆம் தேதி அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.
   v. அப்போது, யானை வழித்தடங்களைக் கண்டறிய அமைக்கப்பட்டுள்ள குழுத் தலைவரான முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் வேணு பிரசாத், தமிழக

அரசு அமைத்துள்ள குழு 41 பகுதிகளை யானை வழித்தடங்களாக அடையாளம் கண்டுள்ளது. இந்த 41 பகுதிகளையும் யானை வழித்தடங்களாக அறிவிக்க வேண்டுமா என்பது குறித்து ஆய்வு நடத்தப்பட்டு வருகிறது. அந்த ஆய்வுப் பணிகளை முடித்து விரிவான அறிக்கை தாக்கல் செய்ய அவகாசம் வழங்க வேண்டும் என கோரிக்கை விடுத்தார்.

vi. இந்த கோரிக்கையை ஏற்றுக் கொண்ட நீதிபதிகள், யானை வழித் தடங்களாக அறிவிக்க வேண்டிய பகுதிகளை அடையாளம் கண்டு அறிக்கை தாக்கல் செய்ய மூன்று மாத கால அவகாசம் வழங்கி விசார ணையை டிச.4-ஆம் தேதிக்கு ஒத்திவைத்தனர்.

## 6. இந்தியா-நேபாளம் கூட்டு பேரிடர் மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகள்

i. இந்தியத் தூதர் நவீன் ஸ்ரீவாஸ்தவாவின் ஒருங்கிணைப்பின் கீழ், நேபாள ராணுவத்திற்கு உதவ இந்திய தொழில்நுட்ப மற்றும் பொறியியல் நிபுணர் குழுக்கள் களமிறக்கப்பட்டன.

ii. அப்பர் திரிசூலி-1 (Upper Trishuli-1) மற்றும் சஞ்சென் (Sanjen) ஆகிய நீர்மின் திட்டங்களின் சுரங்கப்பாதைகளில் தேங்கியிருந்த நீரை வெளியேற்றவும், நிலச்சரிவால் ஏற்பட்ட பெரும் தடைகளை அகற்றவும் இந்தியக் குழு சிறப்பு கனரக இயந்திரங்களை வெற்றிகரமாகப் பயன்படுத்தியது.

iii. உள்கட்டமைப்பைச் சீரமைப்பதோடு மட்டுமல்லாமல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கிராமங்களில் உடனடி நிவாரணம் வழங்க இந்திய மருத்துவக் குழுக்கள் சிறப்பு சுகாதார முகாம்களையும் அமைத்துள்ளன.

## 7. பாக் நீரிணைப் பகுதியில் எல்லை தாண்டிய புலம்பெயர்ந்தோர் மற்றும் அகதிகள் நெருக்கடி

i. தலைமன்னார் அருகே உள்ள ஒரு வெறிச்சோடிய மணல் திட்டில் சிக்கியிருந்த நான்கு பெண்கள் மற்றும் மூன்று குழந்தைகள் (வயது 2, 11 மற்றும் 14) உட்பட எட்டு பேரை இலங்கை கடற்படை வெற்றிகரமாக மீட்டது.

ii. இவர்கள் அனைவரும் தமிழ்நாட்டின் ராமேஸ்வரத்திலிருந்து படகில் ஏறி வந்த இலங்கைத் தமிழர்கள் என்றும், மனிதக் கடத்தல்காரர்களால் அந்த மணல் திட்டில் சட்டவிரோதமாக இறக்கிவிடப்பட்டு கைவிடப்பட்டனர் என்றும் கடற்படையின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்தது.

iii. மீட்கப்பட்ட குழுவினர் பாதுகாப்பாக தலைமன்னார் கடற்படைத் தளத்திற்கு

அழைத்துச் செல்லப்பட்டனர்; அங்கு அவர்கள் தேவையான சட்ட, பாதுகாப்பு மற்றும் மருத்துவ நடைமுறைகளுக்காகப் பாதுகாப்பான காவலில் வைக்கப்பட்டனர்.

8. உலகளாவிய காலநிலை இழப்பு மற்றும் சேதத்திற்கான இழப்பீடு

i. 2026-ஆம் ஆண்டு செப்டம்பர் 8 முதல் 28 வரை நியூயார்க்கில் நடைபெறவுள்ள 81-வது ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தில் நேபாளப் பிரதமர் பலேந்திர ஷா உரையாற்ற உள்ளார்.
ii. இக்கூட்டத்தின் போது, காலநிலை மாற்றத்தால் ஏற்படும் இழப்பு மற்றும் சேதங்களுக்கான இழப்பீட்டை சர்வதேச சமூகத்திடம் நேபாளம் அதிகாரப்பூர்வமாக கோரும்.
iii. பனிப்பாறை ஏரி உடைப்பு வெள்ளம் போன்ற கடுமையான எல்லை தாண்டிய சுற்றுச்சூழல் பேரிடர்கள், முக்கிய தொழில்வளம் மிக்க நாடுகளின் பசுமை இல்ல வாயு வெளியேற்றத்தால் நேரடியாகத் தூண்டப்படுகின்றன என்று நேபாள அரசு சுட்டிக்காட்டுகிறது; குறிப்பாக சீனா, அமெரிக்கா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளை அது குறிப்பிடுகிறது.
iv. ஐக்கிய நாடுகளுக்கான பயணத்திற்கு முன்னதாக, காலநிலை நீதி குறித்த ஒருமித்த கருத்தை உருவாக்க நேபாள வெளியுறவு அமைச்சர் சிஷிர் கனால் காத்மாண்டுவில் உள்ள வெளிநாட்டுத் தூதர்களுடன் விரிவான ஆலோசனைகளை நடத்தினார்.